பக்கங்கள் 17

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 தை 16 செவ்வாய்க்கிழமை 30.01.2024 அதிர்வு 183

**பெண் ஊழியர்கள் துஷ்பிரயோகம்:**


# நாடாளுமன்றப் பணியாளர்கள் மூன்று பேர் அதிரடியாகக் கைது

நாடாளுமன்றத்தில் இரண்டு பெண் ஊழியர்கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளானார்கள் என்று கூறப்படும் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற கனிஷ்ட 04



**வலிகாமம் வடக்கில்**

# மீளக் கையளிக்கப்பட்ட நிலங்களிலிருந்து 500 ஏக்கரைச் சுவீகரிக்க இரகசிய முயற்சி!




*(ந.லோகதயாளன்)*

யாழ். வலிகாமம் வடக்கில் மக்களிடம் மீளக் கையளிக்கப்பட்ட நிலங்களில் இருந்து 500 ஏக்கரைச் சுவீகரிக்க இரகசிய முயற்சி இடம்பெறுகின்றது.

யாழ். சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி என்னும் பெயரில் மேலதிக தேவைகளுக்காகத் தற்போது படையினரிடம் உள்ள நிலங்களுடன் 500 ஏக்கரைச் சுவீகரித்துத் தருமாறு விமானப் போக்குவரத்து அதிகார சபை விடுத்த கோரிக்கைக்கமைய இன்று நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் அப்பகுதிக்கு வருகை தந்து பார்வையிட்டுச் சென்றனர். 04

# வுனியாவில் கிணற்றிலிருந்து இளம் பெண்ணின் சடலம் மீட்பு!

**பல கோணங்களில் பொலிஸார் தீவிர விசாரணை**



**(வசந்தன்)**

வவுனியா, குருமன்காடு, கோவில் வீதி பகுதியில் கிணற்றிலிருந்து 29 வயதுடைய இளம் பெண்ணின் சடலம் இன்று மீட்கப்பட்டுள்ளது என்று வவுனியா பாலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி பெண்ணைக் காணவில்லை என வீட்டார் தேடிய போது வீட்டிலுள்ள கிணற்றில் அவர் சடலமாகக் காணப்படுள்ளார்.

இதையடுத்து வவுனியா பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து 04



# சஜித் அணியின் பேரணியைக் கலைக்க நீர்த்தாரை, கண்ணீர்ப்புகைப் பிரயோகம்

– கொழும்பில் இன்று பதற்றம்

அரசுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் கொழும்பில் முன்னெடுக் கப்பட்ட போராட்டம் மீது பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொண்டதால் பதற்ற மான சூழ்நிலை ஏற்பட்டது.

நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு வந்த இந்த அரசுக்கு மக்கள் ஆணை இல்லை. எனவே, தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தியும், மக்கள் பிரச்சினைக்குத் தீர்வுகளைக் கோரி யுமே பிரதான எதிர்க்கட்சியால் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

கொழும்பு, விகாரமஹாதேவி பூங்கா வுக்கு முன்னால் எதிர்ப்புப் பேரணி ஆரம்பமானது. பேரணி ஆரம்பமாகி சற்று நேரத்துக்குப் பின்னரே நீர்த் தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டது.

பெருமளவு பொலிஸாரும், கலகம் அடக்கும் பொலிஸாரும் குவிக்கப்பட்ட னர். இராணுவரும் பாதுகாப்பு கடமை யில் இறங்கினர்.

பேரணி கொள்ளுப்பிட்டி நோக்கி சென்று கொண்டிருந்தது. எனினும், போராட்டக்காரர்களைக் கலைப்பதற் காகப் பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்புகை தாக்குதல் நடத்தினர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ உள்ளிட்ட தலைவர்களும் பேரணியில் பங்கேற்றனர்.

அதேவேளை, எதிர்க்கட்சித் தலை வர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட தரப் பினருக்கு எதிராக நீதிமன்றம் இன்று தடை உத்தரவு பிறப்பித்திருந்தது.

மாளிகாவத்தை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட முஸ்லிம் பொது மையவாடி தொடக்கம் பிரதீபா மாவத்தை, சத்தர்ம மாவத்தை, ஜயந்த வீரசேகர மாவத்தை, மில்டன் பெரேரா மாவத்தை, ஜ/ம்மா சந்தி ஊடாக சங்கராஜ மாவத்தை வரையான பகுதிகளுக்கு இடையூறு ஏற்படும் வகையில் செயற்படத் தடை விதித்து இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருந்தது.

கொழும்பு இலக்கம் 04 நீதிவான் எல்.மஞ்சுள இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்தார். ஐக்கிய மக்கள் சக்தி யின் தலைவரும் எதிர்க்கட்சித் தலை வருமான சஜித் பிரேமதாஸ, கட்சி யின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத் தும பண்டார உள்ளிட்டோருக்கு எதி ராக இந்தத் தடை உத்தரவு பிறப்பிக் கப்பட்டது. மேலும் சில வீதிகளுக்குச் செல்லவும் தடை விதிக்கப்பட்டிருந் தது.





# யாழில் மகாத்மா காந்தியின் சிரார்த்த தின நிகழ்வு





(எஸ்.நிதர்ஷன்)

மகாத்மா காந்தியின் 76 ஆவது சிரார்த்த தின நிகழ்வுகள் யாழ்ப்பாணம் நகரில் இன்று நடைபெற்றது.

யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் காந்தி சேவா நிலையத்தினரின் அனுசரணையுடன் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலை முன்றலில் சிரார்த்த தின நிகழ்வு இடம்பெற்றது

இந்த நிகழ்வில் மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதுடன் திருவுருவப் படத்துக்கு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் யாழ். மாநகர சபை ஆணையாளர் காந்தி சேவா நிலைய உறுப்பினர்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

காந்தியம் காலாண்டு பத்திரிகையும் இதன்போது வெளியீட்டு வைக்கப்பட்டது.

அந்தப் பத்திரிகையை யாழ். இந்திய துணைத் தூதரக அதிகாரி வெளியிட்டு வைக்க யாழ். மாநகர சபை ஆணையாளர் பெற்றுக்கொண்டார்.



# யுக்திய ஒப்பரேஷன்: மேலும் 868 பேர் கைது

யுக்திய நடவடிக்கையில் மேலும் 868 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் இன்று அதிகாலை 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்துக்குள் இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களில் 3 பேர் தடுப்பில் வைத்து விசாரிக்கப்பட்டு வருகின்றனர். 5 பேர் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் நடவடிக்கையின்போது ஹெரோயின், ஐஸ் போதைப் பொருட்கள், போதை மாத்திரைகள் என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.







# சுதந்திர தின ஒத்திகை நிகழ்வு: பரசூட் விபத்தில் நால்வர் காயம்

கொழும்பு, காலிமுகத்திடலில் நடைபெற்று வரும் இலங்கையின் சுதந்திர தின நிகழ்வுக்கான ஒத்திகை நிகழ்வின்போது ஏற்பட்ட அனர்த்தத்தில் 4 பேர் காயமடைந்துள்ளனர்.

பரசூட் சாகச ஒத்திகையின்போது இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அனர்த்தத்துக்கு உள்ளானவர்களில் இருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும், மேலும் இருவர் நாரஹேன்பிட்டி இராணுவ வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் இரண்டு இராணுவத்தினரும், இரண்டு விமானப் படையினரும் அடங்குகின்றனர். அவர்கள் அனைவருக்கும் சிறிய அளவிலான காயம் ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு காலிமுகத்திடல் பகுதியில் ஒத்திகை இடம்பெற்று வருவதுடன், இதற்காக விசேட போக்குவரத்துத் திட்டமும் இன்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**நாடாளுமன்ற...**

நிலைப் பணியாளர்கள் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கமைய, பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் பணியகத்தின் அதிகாரிகள் அண்மையில் நாடாளுமன்ற வளாகத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்த விசாரணைகளின் அடிப்படையில் மேற்படி நாடாளுமன்றப் பணியாளர்கள் கைதாகியுள்ளனர்.

கைதான மூன்று சந்தேகநபர்களும் விசாரணைகளின் பின்னர் கடுவலை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

**மீளக் கையளிக்கப்பட்ட...**

இதற்கமைய ஏற்கனவே மக்களிடம் கையளிக்கப்பட்ட குரும்பசிட்டி, வசாவிளான், கட்டுவன், கட்டுவன் மேற்கு, குப்பிளான் வடக்கு ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய வகையிலேயே இந்த 500 ஏக்கரை சுவீகரிக்க இரகசிய முயற்சி இடம்பெறுகின்றது.

விமானப் போக்குவரத்து அதிகார சபை ஊடாக நில அளவைத் திணைக்களத்திடம் சமர்ப்பித்த வரைபடம் சகிதம் சுவீகரிக்க முயற்சிக்கும் பகுதிகளின் கிராம சேவகர்களும் இதன்போது அப்பகுதிகளை நேரில் வந்து பார்வையிட்டுச் சென்றதனால் அப் பகுதி மக்கள் பெரும் குழப்பமடைந்துள்ளனர்.

வலி. வடக்கில் ஏற்கனவே படையினரிடம் மூவாயிரம் ஏக்கர் நிலம் உள்ளது. இதனை விடுவிக்குமாறு பல கோரிக்கைகள் முன்வைத்தபோதும் மௌனம் காக்கும் அரசு தற்போது இந்த இரகசிய முயற்சியில் ஈடுபடுகின்றமை இன்று அம்பலமாகியுள்ளது.

**வவுனியாவில்...**

வருகின்றனர்

29 வயதுடைய ஜெனிற்றா சயந்தன் என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இந்த மரணம் தற்கொலையா அல்லது எதிர்பாராது இடம்பெற்றதா அல்லது கொலையா எனப் பல்வேறு கோணங்களில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளமையுடன் தடவியல் பிரிவினரின் உதவியையும் பொலிஸார் நாடியுள்ளனர்.







# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் நியமனம்

(த.சுபேசன்)

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வவுனியா மாவட்டத்திற்கான அமைப்பாளர் மற்றும் வவுனியா மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான அமைப்பாளர்கள் நியமனம் இன்று கொழும்பில் இடம் பெற்றது.

கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவால் அமைப்பாளர்களுக்கான நியமனப்பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்படி, இராசையா விக்டர் ராஜ் – வவுனியா மாவட்ட பிரதான அமைப்பாளர், வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபை அமைப்பாளராகவும், ஜி.பி. நீல் சாந்த – வவுனியா மாவட்ட இணை அமைப்பாளர், வவுனியா தெற்கு (சிங்கள) பிரதேச சபை அமைப்பாளராகவும், ஸ்ரீராம் ரஜிதன் – வவுனியா வடக்கு பிரதேச சபை அமைப்பாளராகவும், சிதம்பரசேகரம் அச்சுதன் – வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை அமைப்பா ளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.



மேற்படி நியமனங்கள் கட்சியின் பிரதி தலைவரும் யாழ், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதனின் பரிந்துரைக்கமைய வழங்கி வைக்கப்பட்டன.

மேற்படி நிகழ்வில் கட்சியின் பொதுச் செயலாளர் சாரதி துஸ்மந்த , கட்சியின் பிரதித்தலைவர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# காற்றாலை மின் உற்பத்தி நிலையம் திட்டத்தை தனியார்துறைக்கு வழங்க அமைச்சரவை அனுமதி

மன்னாரில் காற்றாலை மின் உற்பத்தி நிலையமொன்றை அமைப்பதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பணிகளை தனியார்துறைக்கு போட்டி அடிப்படையில் வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இன்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன இதனை தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் 47 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் 6 காற்றாலைகளை நிர்மாணிக்க அரசாங்கம் திட்டமிடப்பட்டுள்ளது.



எவ்வாறாயினும், வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு காரணமாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளமையினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நாடாளுமன்றிலும் எதேச்சாதிகாரம்

மக்களின் ஆதரவை இழந்த மொட்டுக் கூட்டணியும், மக்களால் தெரிவு செய்யப்படாமல் அந்த மொட்டுக் கூட்டணியினால் தேர்வு செய்யப்பட்ட ஜனாதிபதியும் ஜனநாயக முறைமைகளை மீறி எதேச்சாதிகாரமாக ஆட்சி நடத்தி வருகின்றார்கள் என்ற குற்றச்சாட்டுத் தீவிரமாக எழுந்துள்ள சூழலில், அதை நிரூபிக்குமாற்போல நடந்து கொண்டிருக்கின்றது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசு.

சட்டத்தை யாக்கும் உயரிய சபையான நாடாளுமன்றத்தில் சட்டத்தை உருவாக்கும் விடயத்தில் கூட ஜனநாயக முறைமைகளை மீறி எதேச்சாதிகாரமாக ஆளும் தரப்பு நடந்து கொண்டிருப்பதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இதனால் நாட்டில் ஜனநாயக ஆட்சி முறைமையே - நீதி முறைமையே - பெரும் கேள்விக்குள்ளாகி இருக்கின்றது.

சட்டமாக்கல் விவகாரத்தில் நாடாளுமன்றம் தனி உரிமை கொண்டது. அதற்கான நியாயாதிக்கம்-அதிகாரம்-நாடாளுமன்றத்தினுடையதுதான். முற்றும் முழுதாக நாடாளுமன்றத்தின் கடப்பாடு அது.

ஆயினும், அதை நாடாளுமன்றம் எவ்வாறு முன்னெடுக்க வேண்டும் என்பதற்கு அரசமைப்பிலும், நாட்டின் சட்டங்களிலும், நாடாளுமன்றத்தின் நிலையியல் கட்டளைகளிலும் தெளிவான ஏற்பாடுகள் - வரையறைகள் - முன்மாதிரிகள் - உள்ளன.

அவற்றை மீறி நாடாளுமன்றம் சட்டத்தை யாக்க முடியாது.

ஆனால் இலங்கையின் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் சரித்திரத்தில் முன்பின் நடந்திராத மாதிரி இப்போது உயர்நீதிமன்ற வழிகாட்டல்கள் மற்றும் நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளை மீறி, அவற்றுக்கு மாறான விதத்தில், ஒரு சட்டத்தைப் பிழையான முறையில் - குறுக்கு வழியில் - நாடாளுமன்றத்தில் ரணிலின் அரசு நிறைவேற்றியிருப்பதாக அறிவித்துள்ளது என்று குற்றம் சுமத்தப்படுகிறது.

பொதுவாக ஒரு சட்டம் அல்லது தீர்மானம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டாலும் அது நிறைவேற்றப்பட்டது என சபாநாயகர் சான்றளிக்கும் போதுதான் அது சட்டமாக நடைமுறைக்கு வரும்.

இப்போது உரிய முறைகளைப் பின்பற்றாமல், உயர்நீதிமன்ற வழிகாட்டல்களை முறியடித்து, நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்படும் இணையக் காப்பு சட்டமூலத்தில் சான்றளித்து ஒப்பமிட முன்னர் அது தொடர்பில் சட்டமா அதிபரின் சான்றாலோசனையை சபாநாயகர் பெற்றுக் கொள்ள வேண்டுமென சட்டத்துறையில் புலமைமிக்க பேராசிரியரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜி.எல்.பீரிஸ் பகிரங்கமாகக் கோரிக்கை முன் வைத்திருக்கிறார்.

மேற்படி இணைய அல்லது நிகழ்நிலை காப்புச் சட்டம் மக்களின் அடிப்படை உரிமைகளை - குறிப்பாக கருத்து வெளியிடும் உரிமைகளை - அரசமைப்பின் அடிப்படை ஏற்பாடுகளுக்கு முரணான வகையில் பறிக்கின்றது என்று உள்நாட்டிலும் சர்வதேச நாடுகளிலும் இருந்து கடும் எதிர்ப்பும் கண்டனமும் கிளம்பி உள்ளன.

மனித உரிமை ஆர்வலர்கள், நாட்டில் உள்ள பொது அமைப்புகள் என்று மட்டுமல்லாமல், நாடு கடந்த சர்வதேச அமைப்புக்கள், ஐ.நா. நிறுவனங்கள், அமெரிக்கா, பிரிட்டன் உட்பட மேற்குலக நாடுகள், ஆஸ்திரேலியா போன்ற பல தரப்புக்களும் இந்த நிகழ்நிலைக் காப்பு சட்டத்திற்கு எதிராகக் கடுமையாகக் குரல்கள் எழுப்பி வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில் மேற்படி சட்டத்தை அடிப்படை முறைமைகளுக்கும், ஒழுங்கு விதிகளுக்கும் மாறாக அரசு நிறைவேற்றி இருப்பதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்திருப்பது பாரதூரமான விடயமாகும்.

இந்தச் சட்டமூலத்தைப் பரிசீலித்த உயர் நீதிமன்றம் சாதாரண பெரும்பான்மை மூலம் நாடாளுமன்றத்தில் இந்தச்சட்டமூலத்தை நிறைவேற்றுவதாயின் அதன் 34 பிரிவுகளில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்று அறிவுறுத்தி இருந்தது.

நாடாளுமன்றத்தின் குழுநிலை விவாதத்தின் போது இந்தத் திருத்தங்கள் எல்லாம் ஒழுங்கு முறையாக செய்யப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்துவதற்கு இடம் அளிக்காமல் - அதற்குக் கால அவகாசம் வழங்காமல் - நாடாளுமன்றத்தில் தன்னிடமிருந்த சாதாரண பெரும்பான்மையை வைத்து, அவசர அவசரமாக அதைநிறைவேற்றிவிட்டிருப்பதாக அரசு அறிவித்துள்ளது

ஆனால் உயர்நீதிமன்றம் திருத்தி மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டிய 13 திருத்தங்கள் செய்யப்படாமலேயே இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருப்பதாக அறிவித்திருப்பது சட்டவிரோதம், ஆகையினால் இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றியாகிவிட்டது என்ற அறிவிப்பு தவறானது என எதிர்க் கட்சிகள் பகிரங்கமாகச் சுட்டிக் காட்டுகின்றன.

இது விடயத்தில் சபாநாயகர் என்ன செய்யப் போகின்றார்? சட்டமா அதிபர் என்ன பரிந்துரையை அரசுக்கு வழங்கப் போகின்றார்?

இலங்கை தரப்புக்கள் மட்டுமல்ல, சர்வதேச தரப்புகள் கூட இவ்விடயத்தில் அவர்கள் இருவரின் பிரதிபலிப்புகளையும் பார்த்திருக்கின்றன. நுட்பமாகப் பரிசீலிப்பதற்கு காத்திருக்கின்றன.

# மின் கட்டணம் செலுத்துவதற்கு புதிய வழிகள் அறிமுகமாகின

மின் கட்டணம் செலுத்துவதற்கு இலங்கை மின்சார சபையினால் புதிய முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, மின்சார சபையின் CEBCare விண்ணப்பம், online வங்கி சேவைகள், CEB இணைய தளம், அஞ்சல் அலுவலகம், CEB மற்றும் வங்கி KIOSK இயந்திரங்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகளில் மின் கட்டணத்தை செலுத்துவதற்கு வழிமுறைகள் செய்யப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.



மேலும், மின்சார கட்டணம் தொடர்பான பிரச்சினைகளை 1987 என்ற விசேட இலக்கத்திற்கு அறிவிக்க முடியும் என்றும் மின்சார சபை தெரிவித்துள்ளது.






# வை.எல்.எஸ்.ஹமீட்டின் நினைவேந்தல் நிகழ்வு

(அபு அலா)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஸ்தாபகச் செயலாளர் மர்ஹூம் வை.எல்.எஸ். ஹமீடின் 'வாழ்வும் பணியும்' நினைவேந்தல் நிகழ்வு கல்முனை ஆஸாத் பிளாஸா மண்டபத்தில் இடம்பெற்றது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய கொள்கை பரப்புச் செயலாளர், கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கே.எம்.ஏ.றஸாக் தலைமையில் இந்த நினைவேந்தல் இடம்பெற்றது.

இந்த நினைவேந்தல் நிகழ்வுக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தேசிய தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் மற்றும் முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய ஆகியோர் வை.எல்.எஸ்.ஹமீட் பற்றிய விஷேட நினைவுரையாற்றினர்.





மேலும், மக்கள் காங்கிரஸ் கட்சியின் தவிசாளர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி, சிரேஷ்ட பிரதித் தலைவர் சட்டத்தரணி என்.எம்.ஷஹீட், தேசிய அமைப்பாளர் அப்துல்லாஹ் மஹ்ரூப், செயலாளர் நாயகம் எஸ்.சுபைர்தீன், பிரதித் தலைவர் எம்.எஸ்.அனீஸ், பிரதித் தவிசாளர் எம்.ஐ.முத்து முஹம்மட், பிரதி செயலாளர் நாயகம் எம்.ஏ.அன்சில், பிரதி தேசிய அமைப்பாளர் எம்.ஏ.எம். தாஹிர் உள்ளிட்ட கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், அம்பாறை மாவட்ட புத்திஜீவிகள், கட்சியின் முக்கியஸ்தர்கள், வை.எல்.எஸ். ஹமீடின் குடும்பத்தினர் மற்றும் கட்சியின் ஆதவாளர்கள் என ஆயிரக்கணக்கானவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

வை.எல்.எஸ்.ஹமீடின் மறுமை வாழ்வின் ஈடேற்றத்திற்காக வேண்டி விஷேட துஆப் பிரார்த்தனையும் இடம் பெற்றது.






# தடை செய்யப்பட்ட இழுவை மடியை பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபட்ட ஐந்து மீனவர்கள் கைது

**(மன்னார் நிருபர்)**

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விடத்தல் தீவு கடற்கரையில் தடை செய்யப்பட்ட இழுவை மடியை பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபட்ட 5 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், அவர்கள் பயன்படுத்திய இழுவை படகையும் கடற்றொழில் திணைக்களத்தினர் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் எருக்கலம்பிட்டி மற்றும் உப்புக்குளம் பகுதியை சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

விடத்தல்தீவு மக்கள் மற்றும் கடற்றொழில் திணைக்கள உத்தியோகத்தர்களால் நேற்று இரவு மேற்படி மீனவர்கள் கடலில் வைத்து பிடிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், விடத்தல் தீவு இறங்கு துறையில் இழுவை படகு நிறுத்தப்பட்டுள்ளது. மேலதிக நடவடிக்கைக்காக 5 மீனவர்களும் மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் மேலதிக நடவடிக்கைக்காக அவர்களை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளனர்.










# இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்கத்தின் திருகோணமலை கிளையின் ஒன்றுகூடல்

(எஸ்.கீதபொன்கலன்)

இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்க திருகோணமலை மாவட்டக் கிளையின் வருடாந்த ஒன்று கூடலும், கௌரவிப்பு நிகழ்வும் திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்து கொண்டு சிரேஸ்ட நிர்மாணிகளை கௌரவித்தார்.

கிராமிய வீதிகள் இராஜங்க அமைச்சரும், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவனேசத்துரை சந்திரகாந்தன் மற்றும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவருமான கபில அத்துக்கோரள ஆகியோர் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

தேசிய நிர்மாணிகள் சங்க மாவட்டத் தலைவர் லாலின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கான ஒழுங்கமைப்பை தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் கு.நளினகாந்தன் மேற்கொண்டிருந்தார்.



# செந்நெல் சாஹிறா வித்தியாலயத்தில் பாராட்டு நிகழ்வும், பரிசளிப்பு விழாவும்

(சம்மாந்துறை நிருபர்)

செந்நெல் மறுமலர்ச்சியின் இரண்டாவது கட்ட செயல் அமர்வு செந்நெல் சாஹிரா மஹா வித்தியாலயத்தில் நேற்று இடம் பெற்றது.

செந்நெல் மறுமலர்ச்சி செயல் திட்டத்தின் கீழ் அந்த பாடசாலை மாணவர்களுக்கு பகுதிநேர வகுப்பில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களின் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்காக பல்வேறு வேலை திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





இந்த கூட்டத்தில் செந்நெல் மறுமலர்ச்சியினால் நடத்தப்பட்ட பகுதிநேர வகுப்பில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய இரண்டு பாடங்களிலும் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு நினைவுச் சின்னங்களும், அப்பியாச கொப்பிகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.





# சாய்ந்தமருது பிரதேச செயலக நலன்புரி அமைப்பின் வருடாந்த ஒன்றுகூடலும், கௌரவிப்பு நிகழ்வும்

(அஸ்ஹர் ஆதம்)

சாய்ந்தமருது பிரதேச செயலக நலன்புரி அமைப்பின் வருடாந்த ஒன்றுகூடலும், உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு நிகழ்வும் சாய்ந்தமருது லீ-மெரிடியன் மண்டபத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளரும் பிரதேச செயலக நலன்புரி அமைப்பின் தலைவருமான எம்.எம். ஆசிக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் கலந்து கொண்டார்.

மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் எச்.பீ.அணீஸ், அம்பாறை மாவட்ட செயலக பிரதம பொறியியலாளர் ஏ.எம். சாஹிர், பிரதேச செயலக கணக்காளர் ஜே.நுஸ்ரத் பானு, உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், நிருவாக உத்தியோகத்தர் எம்.என்.எம்.றம்சான், நிருவாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.நளீர், தலைமைப் பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலகத்தில் கடந்த 2023 ஆம் ஆண்டு சேவையாற்றி இடமாற்றம், பதவியுயர்வு மற்றும் ஓய்வுபெற்றுச்சென்ற உத்தியோகத்தர்கள் சேவைநலன் பாராட்டியும் அதிதிகளால் ஞாபகச் சின்னம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்

அத்துடன், உத்தியோகத்தர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.















# மன்னார் பொது வைத்தியசாலையில் பொலித்தீன் பாவனை முற்றாக தடை

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை மற்றும் வைத்தியசாலை வளாகத்தில் உடன் அமுலுக்கு வரும் வகையில் பொலித்தீன் பாவனை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை சூழல் மற்றும் பொது இடங்களில் அதிகரித்து வரும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனையால் சூழல் மாசடைவதையும், அதே நேரம் மழை காலங்களில் சிதறிக் கிடக்கும் பொலித்தீன் பைகளில் இருந்து டெங்கு நுளம்பு பரவல் அதிகரித்து காணப்படுவதால் மன்னார் வைத்தியசாலையில் முதல் கட்டமாக பொலித்தீன் பைகளின் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக சிகிச்சைக்காக வருபவர்கள், நோயாளர்களை பார்வையிட வருபவர்கள் பொலித்தீன் பைகளுக்கு பதிலாக உக்கக் கூடிய அல்லது மீள் பயன்படுத்தக்கூடிய பைகளை கொண்டு வருமாறு வைத்தியசாலை நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதே நேரம் பொலித்தீன் பைகளுடன் வருபவர்களிடம் இருந்து பொலித்தீன் பைகள் வாங்கப்பட்டு மாற்றீட்டு பைகள் தற்காலிகமாக வைத்தியசாலை நிர்வாகத்தினரால் வழங்கி வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.








# தேசிய மட்ட சதுரங்க குழு போட்டியில் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை சாதனை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தேசிய சதுரங்க போட்டி கடந்த 26, 27, 28 ஆம் திகதிகளில் குருநாகல் நகரில் வயம்ப றோயல்கல்லூரி மற்றும் மஹிந்த கல்லூரி ஆகிய பாடசாலை மண்டபங்களில் நடைபெற்றது.

கல்வி அமைச்சுடன், இலங்கை பாடசாலைகள் சதுரங்க சம்மேளனம் இணைந்து நடாத்திய தேசிய மட்ட சதுரங்க குழு போட்டியில் நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையின் 13 மற்றும் 17 வயதிற்குட்பட்ட இரண்டு அணிகள் பங்கேற்றன.

இந்த போட்டியில் மாணவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தி பங்குபற்றுதல் மற்றும் திறமைச்சான் றிதழுடன், 17 வயதுப் பிரிவில் எம்.என். எம்.அப்ஹாம் 2nd Bord Champion ஆகவும் தெரிவு செய்யப்பட்டு கிழக்கு மாகாணத்திற்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.





# சீரற்ற கால நிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இம்ரான் எம்.பியால் உலர் உணவு வழங்கி வைப்பு

(ஏ.எச் ஹஸ்பர்)

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச செயலகப் பகுதிக் குட்பட்ட மயிலப்பன்சேனை, சோலை வெட்டுவான் கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு உலர் உணவு நிவார ணப்பொதிகள் வழங்கி வைக்கப்பட் டன.

மேற்படி உலர் உணவுப் பொதிகளை திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் அவர்கள் வழங்கி வைத்தார்.



இந்த நிகழ்வில் கிராம அபிவிருத்திச் சங்க தலைவர், பள்ளிவாயல் தலைவர், கிண்ணியா மீனவ மகா சங்கத்தலைவர் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.



## காந்தி நினைவு தினம்:

# டில்லி ராஜ்காட்டில் குடியரசுத் தலைவர் பிரதமர் மோடி மலர் தூவி மரியாதை

மகாத்மா காந்தியின் 76 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு இன்று தலைநகர் டில்லியில் ராஜ்காட்டில் உள்ள காந்தி நினைவிடத்தில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர் மற்றும் பிரதமர் மோடி உள்ளிட்டோர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.

இந்திய விடுதலைக்காக ஆங்கிலேயர்களை எதிர்த்து அறவழியில் போராட்டம் நடத்தியவர் மகாத்மா காந்தி. இவர் டில்லி பிர்லா மாளிகையில் கோட்சேவால் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த நிலையில், மகாத்மா காந்தியின் 76 ஆவது நினைவு நாள் இன்று இந்தியா முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.

மகாத்மா காந்தி நினைவு நாளான இன்று, அவரது உருவப்படத்துக்கு அரசியல் கட்சி தலைவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தி வருகின்றனர். அந்த வகையில், காந்தி நினைவிடத்தில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து, குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர், பிரதமர் மோடி மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், மத்திய அமைச்சர் ஹர்தீப் பூரி உள்ளிட்டோர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.

அதன் தொடர்ச்சியாக “ரகுபதி ராகவ ராஜாராம், பதீத பாவன சீதாராம்” பாடல் ஒலிக்கப்பட்டது.

முன்னதாக பிரதமர் மோடி தனது எக்ஸ் தளத்தில்,

“பாபுவின் புண்ணிய திதியில் அவருக்கு அஞ்சலி செலுத்துகிறேன், நமது தேசத்துக்காக தியாகம் செய்த அனைவருக்கும் அஞ்சலி செலுத்துகிறேன். அவர்களின் தியாகங்கள் மக்களுக்கு சேவை செய்யவும், நமது தேசத்துக்கான அவர்களின் பார்வையை நிறைவேற்றவும் நம்மை ஊக்குவிக்கின்றன.” எனப் பதிவிட்டுள்ளார்.



# ஸ்பெயினில் ஐரோப்பிய முதலீட்டாளர்கள் மாநாடு: முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் ஒப்பந்தங்கள்

வெளிநாட்டு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள முதல்வர் ஸ்டாலின், ஸ்பெயின் தலைநகர் மேட்ரிட்டில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்று, தமிழகத்தில் நிலவும் சாதகமான முதலீட்டு சூழல் குறித்து எடுத்துரைத்துள்ளார்.

இதைத் தொடர்ந்து, பல்வேறு தொழில் நிறுவனங்கள் முதல்வர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டன.

(15ஆம் பக்கம் பார்க்க)



# வெறுப்பு எனும் புயலில் உண்மை நல்லிணக்க சுடர் அணையக் கூடாது

## காந்தி நினைவு நாளில் ராகுல் கருத்து

"வெறுப்பு மற்றும் வன்முறை நிறைந்த சித்தாந்தம் காந்தியை இதேநாளில் பறித்துச் சென்றது. இப்போது, வெறுப்பு எனும் புயலில் உண்மை மற்றும் நல்லிணக்கத்தின் சுடர் அணைந்துவிடக் கூடாது" என்று காங்கிரஸ் எம்.பி. ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

இந்திய விடுதலைக்காக ஆங்கிலேயர்களை எதிர்த்து அறவழியில் போராட்டம் நடத்தியவர் மகாத்மா காந்தி. இவர் டெல்லி பிர்லா மாளிகையில் கோட்சேவால் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்த நாள் இந்திய வரலாற்றில் மிகப் பெரிய துக்க நாளாக அமைந்தது. அதையொட்டி, அன்றைய தினம் ஒவ்வோர் ஆண்டும் நினைவு கொள்ளப்படுகிறது. அன்றைய தினமே இந்தியாவில் 'தியாகிகள் தினம்' என்று கொண்டாடப்படுகிறது. அந்தவகையில், மகாத்மா காந்தியின்நினைவு நாள் இன்று இந்தியா முழுவதும் அனுஷ்டிக்கப்படுகிறது.

மகாத்மா காந்தி நினைவு நாளையொட்டி, அவரது உருவப்படத்துக்கு அரசியல் கட்சி தலைவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தி வருகின்றனர். அந்த வகையில், காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி இது குறித்து தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"வெறுப்பு மற்றும் வன்முறையும் நிறைந்த சித்தாந்தம் காந்தியை இதேநாளில் பறித்துச் சென்றது. அதே வெறுப்பு சித்தாந்தம் காந்தியின் கொள்கைகள், லட்சியங்களை நம்மிடமிருந்து பறிக்க முயல்கிறது. வெறுப்பு என்னும் புயலில் உண்மை மற்றும் நல்லிணக்கத்தின் சுடர் அணைந்துவிடக் கூடாது. இதுவே காந்திஜிக்கு நாம் செய்யும் உண்மையான அஞ்சலியாக இருக்கும்" - என்று பதிவிட்டுள்ளார்.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே எக்ஸ் சமூகவலைதளப் வெளியிட்டுள்ள பக்கத்தில்,

"தியாகிகள் தினத்தில், நமது தேசத்தின் நன்னெறிக்கான திசை காட்டியான மகாத்மா காந்திக்கு மரியாதை செலுத்துகிறேன். அவருடைய லட்சியங்களையும், சிந்தனைகளையும் அழிக்க நினைப்பவர்களுக்கு எதிராக நாம் போராட உறுதியேற்க வேண்டும். வேற்றுமையில் ஒற்றுமை காணும் இந்தியாவைப் பாதுகாக்கவும், நமது மக்களிடையே நீதி, சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தை உறுதிப்படுத்தவும் அனைத்தையும் செய்வோம்" எனப் பதிவிட்டுள்ளார்.

# ஸ்பெயினில் ஐரோப்பிய முதலீட்டாளர்கள் மாநாடு: முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் ஒப்பந்தங்கள்

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழகத்தை வரும் 2030 ஆம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டொலர் பொருளாதார மாநிலமாக மாற்றும் முயற்சியில் தமிழக அரசு தீவிரமாக இறங்கி உள்ளது. இதற்காக ஏற்கெனவே தமிழகத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ள ஓட்டோமொபைல், தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளை தாண்டி, செயற்கை நுண்ணறிவு , மின் வாகனத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் தொடர்ந்து முதலீடுகளை ஈர்க்கும் நடவடிக்கை தொடங்கியுள்ளது.

தமிழகத்துக்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்க்கும் நோக்கில், முதல்வர் ஸ்டாலின் தற்போது வெளிநாட்டு பயணம் மேற்கொண்டுள்ளார். இதற்கமைய, உத்தியோகபூர்வ விஜயமாக சென்னையில் இருந்து கடந்த 27 ஆம் திகதி இரவு புறப்பட்ட முதல்வர் ஸ்டா லின், 28 ஆம் திகதி மாலை ஸ்பெயின் தலைநகர் மேட்ரிட் சென்றிருந்தார்.



# சோமாலியா கடற்கொள்ளையர்களிடம் சிக்கிய மீனவர்களை மீட்டது இந்திய போர்க் கப்பல்

சோமாலியா கடற்கொள்ளையர்களிடம் சிக்கவிருந்த ஈரானிய கொடியுடன் சென்ற மீன்பிடிக் கப்பலை இந்திய கடற்படைக்குச் சொந்தமான ஐ.என்.எஸ். சுமித்ரா போர்க்கப்பல் துரிதமாக செயல்பட்டு மீட்டுள்ளது.

ஈரானிய மீன்பிடி கப்பலில் இருந்த பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த 19 பேரும் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர். கடந்த 24 மணி நேரத்தில் இரண்டு கொள்ளை முயற்சியை இந்திய கடற்படை முறியடித் துள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இந்தியக் கடற்படை செய்தித் தொடர்பாளர் எக்ஸ் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“திங்கட்கிழமையன்று சோமாலியாவின் கிழக்குக் கடற்கரையோரப் பகுதியில் இருந்து அல் நயீமி என்ற மீன்பிடிக் கப்பலைக் கடத்த ஆயுதம் ஏந்திய சோமாலியா கடற்கொள்ளையர்கள் 11 பேர் முயற்சி செய்தனர். அப்போது ரோந்துப் பணியில் இருந்த ஐ.என்.எஸ். சுமித்ரா கப்பல் துரிதமாக செயல்பட்டு ஈரானிய மீன்பிடி கப்பலை மீட்டது. அதிலிருந்த 19 பேரும் மீட்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்களாவர்.

இந்தக் கொள்ளை முயற்சியை துரிதமாக செயல்பட்டு தடுத்ததன் மூலம் இவ்வாறாக கைப்பற்றப்படும் படகுகளைக் கடத்தலுக்கு பயன்படுத்தும் கொள்ளையர்களின் முயற்சியும் முறியடிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது, கொச்சியில் இருந்து 850 நாட்டிக்கல் மைல் தொலைவில் தெற்கு அரேபியக் கடலில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிக்கும் இந்திய போர்க் கப்பல்கள் கடற்கொள்ளையர்களைக் கட்டுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பணியாற்றி வருகிறது.” எனக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக நேற்று, ஏடன் வளைகுடா பகுதியில் சென்று கொண்டிருந்த ஈரானிய மீன்பிடி படகை சோமாலியாவைச் சேர்ந்த கடற்கொள்ளையர்கள் சிறைபிடித்தனர். அந்த மீன்பிடி படகில் இருந்த 17 மீனவர்களை பணயக் கைதியாக்கி சோமாலிய எல்லைப்பகுதிக்கு படகை செலுத்தினர்.

இதுதொடர்பான தகவல் இந்திய கடற்படையின் ஐ.என்.எஸ். சுமித்ரா போர்க்கப்பலுக்கு கிடைத்தது. உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற இந்திய போர்க்கப்பல், சோமாலிய கடற்கொள்ளையர்களை விரட்டியடித்தது. ஈரான் மீன்பிடி படகு மற்றும் அதிலிருந்த 17 மீனவர்கள் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

# அமெரிக்க பல்கலை வளாகத்தில் இந்திய மாணவர் சடலமாக மீட்பு

அமெரிக்காவில் பர்டூர் பல்கலைகழகத்தில் படித்து வந்த இந்திய மாணவர் ஒருவர், பல்கலைக்கழக வளாகத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மகனைக் காணவில்லை என அவரது தாயார் தெரிவித்திருந்த நிலையில், அடுத்தநாள் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து பொலிஸ் அதிகாரிகள் கூறுகையில்,

“அலிசன் சாலையில் இறந்த ஒருவரின் உடல் இருப்பதாக எங்களுக்குத் தகவல் வந்தது. அங்கு சென்று பார்த்ததில் பர்டூர் பல்கலைக்கழக வளாகத்தில் இறந்து கிடந்தது கல்லூரி மாணவர் என்பது தெரியவந்தது. அம்மாணவர், நீல் ஆச்சாரியா என்பதும்



தெரிய வந்தது. அவர் பர்டூர் பல்கலைக்கழகத்தின் ஜோன் மார்டின்சன் கல்லூரியில் கணினி அறிவியல் மற்றும் தகவல் அறிவியல் படித்து வந்துள்ளார்” – என்றனர்.

முன்னதாக, நீலின் தாயார் கவுரி ஆச்சாரியா தனது மகனைக் காணவில்லை, அவரைக் கண்டுபிடிக்க உதவுங்கள் என்று சமூக வலைதளத்தில் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

தனது எக்ஸ் சமூக வலைத்தள பக்கத்தில் இதுகுறித்து அவர் வெளியிட்ட பதிவில்,

“எங்களுடைய மகன் நீல் ஆச்சாரியாவை ஜனவரி 28 ஆம் திகதி முதல் காணவில்லை. அவர் அமெரிக்காவில் உள்ள பர்டூர் பல்கலைகழகத்தில் படித்து வருகிறார். எனது மகனை பல்கலைக்கழக வளாகத்தில் இறக்கி விட்ட கார் ஓட்டுநரே கடைசியாக பார்த்துள்ளார். மகனைப் பற்றிய தகவல் ஏதும் தெரியாமல் தவித்து வருகிறோம். தயவு செய்து எங்களுக்கு உதவுங்கள்” என்று தெரிவித்திருந்தார்.



# படைக்கல சேவிதர் இன்றுடன் ஓய்வு



படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தமது 42 வருட நாடாளுமன்ற சேவையை நிறைவு செய்து இன்றுடன் ஓய்வு பெற்றார்.

2018 ஆம் ஆண்டு முதல் நாடாளுமன்றத்தின் ஆறாவது படைக்கல சேவிதராக நரேந்திர பெர்னாண்டோ பதவி வகித்து வந்துள்ளார்.

அடுத்த நாடாளுமன்ற படைக்கல சேவிதராக நியமிக்கப்படவுள்ள குஷான் சம்பத் ஜயரத்னவிடம் பாரம்பரிய முறைப்படி செங்கோலையும் வாளையும் கையளிக்கும் நிகழ்வு இன்று காலை நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

இந்தநிலையில், இலங்கையின் ஏழாவது படைக்கல சேவிதராக குஷான் சம்பத் ஜயரத்ன, நாளை பதவியேற்க உள்ளார் என நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் அறிவித்துள்ளது.





